# 6. மனச்சிக்கல் நோய் நிலை
## (ஹிஸ்டீரியா)
## [HYSTERIA]

இராமு என்ற 12 வயது சிறுவனுக்கு சில நாட்களாக நினைவு இழப்பு நோய் விட்டு விட்டு வந்து கொண்டிருந்தது. அதாவது சுமார் 2 அல்லது 5 நிமிடம் சுய நினைவு இன்றி அவன் மயக்கம் அடைந்து விடுவான். பத்து நாள் கழித்து அவனுக்குத் தேர்வு. ஆனால் வகுப்பறைக் கூடத்தில் பல முறை தொடர்ந்து இத்தகைய நிலை ஏற்பட்டதால் அவனால் பள்ளிக்குச் செல்ல இயலவில்லை. அவனுடைய குடும்ப மருத்துவர் அவனைப் பரிசோதித்த பின்னர் ஒரு நரம்பியல் நிபுணரிடத்து ஆலோசனைக்கு அவனை அனுப்பினார். நரம்பியல் நிபுணர் அவனை மனநல மருத்துவரிடம் இறுதியாக அனுப்பி வைத்தார்.

மனநல மருத்துவர் அச்சிறுவனை ஆராய்ந்ததில் அவ்வகை நினைவு இழப்பு நோய்க்கு மன உளைச்சலும், பயமும்தான் காரணம் என்று கூறினார். அவனுடைய தந்தைக்குக் குடிப்பழக்கம் இருந்தது. தினமும் அவன் பெற்றோர்களிடையே சண்டை. இச்சூழ்நிலையில் இராமுவைப் பெற்றோரை விட்டுத் தூரத்தில் உள்ள உறவினர் வீட்டிலிருந்து பள்ளிக்குச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது.

இராமுவிற்கு வீட்டின் சூழ்நிலையால் மகிழ்ச்சியின்மையும், அம்மாவைப் பிரிந்து செல்ல வேண்டிய நிலையும், அதை ஏற்றுக்கொள்ள முடியாத மனப்பக்குவமும், 10 நாள் கழித்து வரும் தேர்வைக் குறித்துப் பயமும், கணக்கு வாத்தியாரைக் குறித்த அச்சமுமே அவனுக்கு நினைவு இழப்பு நோய் வரக் காரணங்களாக அமைந்தது என்பதை மருத்துவர் கண்டுணர்ந்தார்.

முத்து என்ற 42 வயது வீட்டுத் தலைவர் ஒருவிதமான "வலிப்பு மாதிரி"யான நோய்க்காக மனநல மருத்துவரிடம் அழைத்து வரப்பட்டார். அவரை ஆராய்ந்ததில் கூட்டுக் குடும்பத்தில் அண்மையில் இருந்து பிரிந்து வந்து சுயதொழில் ஏற்றுக்கொண்டு இருந்ததால் எதிர்காலத்தைப் பற்றிப் பயமும் குடும்பப் பொறுப்பின் சுமையுமே இவ்வகையான வலிப்பு நோய்க்குக் காரணம் என்று அறியப்பட்டது.

மனநல மருத்துவர்கள் மேற்கூறிய நோய் அறிகுறிகளை ஹிஸ்டீரியா (மனச்சிக்கல் நோய் Conflict) என்று கூறுவர். இவ்வகையான மனநோய் பற்றி நாம் முழுமையாக அறிந்து கொள்வோம்.

மனச்சிக்கல் நோய் அல்லது ஹிஸ்டீரியா என்னும் மனநோய் மன உளைச்சலால் உருவாகும்

நோயாகும். இந்நோயால் ஆட்பட்டவருக்கு உடல் அளவிலோ அல்லது மனத்தளவிலோ மாற்றமும், குறைபாடும் ஏற்படும். ஆனால் அம்மாற்றத்திற்கும் குறைபாட்டிற்கும் உடல் ரீதியான அடிப்படைக் காரணம் எதுவும் இருக்காது.

இந்நோய் பண்டைக் காலங்களில் தெய்வக் குற்றம், பேய் பிசாசுகளின் சேட்டையினால் ஏற்படுகின்ற கோளாறு என்று நம்பப்பட்டது. ஆனால் இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சி அக்கருத்தை ஆதாரமற்றது என்று எடுத்துக் கூறுகிறது.

இந்நோய்க்கு ஆட்படுபவர் பெரும்பாலும் ஆடம்பரப் பிரியராகவும், பேராசை, சுயநலம், மற்றும் எதையும் பெரிதுபடுத்தும் சுபாவம் கொண்டவராகவும் இருப்பர். அடிக்கடி மாறும் உணர்ச்சி உடையவராகவும், அதிக உணர்ச்சிவசப்படுபவராக்வும், மன முதிர்ச்சியற்றவராகவும், நிலையற்ற கொள்கையுடை-யவராகவும் இவர்கள் இருப்பர். இவர்களுடைய இயல்புகளையும், குணாதிசயங்களையும் ஹிஸ்டீரிக்கல் பண்பியல் (வசியப்படுத்தும்) (Hysterical Personal-ity) தொகுப்பு என்று உளவியல் நிபுணர் கூறுவர்.

### ஹிஸ்டீரியாவின் வெளிப்பாடு

இந்நோய் ஆண், பெண் இருபாலருக்கும் வரக்கூடியது. எனினும் இளம் பெண்களிடையே

இந்நோய் அதிகமாகக் காணப்படுகிறது. மேலும் அமைதியற்ற குடும்பச் சூழ்நிலையிலிருந்து வரும் குழந்தைகளிடமும், பிளவுபட்ட குடும்பங்களிலிருந்து வரும் குழந்தைகளிடமும் ஹிஸ்டீரியா நோய் அதிக அளவில் காணப்படுகிறது.

## மனச்சிக்கல் நோய் / ஹிஸ்டீரியா தோன்றக் காரணங்கள்

ஒருவரின் பண்பியல் தொகுப்பு வாழ்க்கை சூழ்நிலைக்கு ஈடுகொடுக்க முடியாத தருணத்தில் உருவெடுக்கும் மனச்சிக்கலுக்கு ஒருவர் ஒரு சரியான தீர்வு காணமுடியாத பட்சத்தில் இந்நோய் ஏற்படுகிறது.

உதாரணம் :

1. மனக்கவலையை வெளிப்படுத்த ஒருவழி (முத்துவிற்கு ஏற்பட்ட மனச்சிக்கல் : தனிக்குடும்பம், சுயதொழில், சுமை)
2. பிரச்சினைகளில் இருந்து தப்பிக்க ஒருவழி (இராமுவிற்கு ஏற்பட்ட மனச்சிக்கல் : பரீட்சை பயம்)
3. இளம் வயதின் கசப்பான அனுபவத்தின் எதிரொலியாகவும் இந்நோய் உருவெடுக்கலாம்
4. பாலுணர்வில் ஏற்படும் சிக்கல்களும், ஏமாற்றங்களும் நோய் உருவாக க் காரணங்களாக இருக்கலாம்.
5. இந்நோய் மற்றவர்களின் கவனத்தையும், அனுதாபத்தையும் பெற வேண்டியும் ஏற்படலாம்.

## ஹிஸ்டீரியாவின் தன்மை

1. எவ்வகையான உடல் கோளாறும் இந்நோய்க்கு மூல காரணமாக இருக்காது.
2. நோயாளி தனிமையில் இருக்கும்போது நோய் வருவதில்லை. ஆனால் மற்றவர் அனுதாபம் கொள்ளும் வகையில் பிறர் முன்னிலையிலேயே நோய் உருவெடுக்கும்.

## ஹிஸ்டீரியாவின் அறிகுறிகள்

ஹிஸ்டீரியாவின் அறிகுறிகள் இரண்டு வகைப்படும்.

1. உடலியக்க மாற்றங்கள்
2. நினைவிழப்பு நிலைகள்

## உடலியக்க மாற்றங்கள்

இவ்வகை ஹிஸ்டீரியா நோயானது நோயாளியிடத்தில் பல்வேறு கோணங்களில் தோற்றமளிக்கிறது. இதன் அடிப்படைக் காரணம் மனமே! வாழ்க்கைப் பிரச்சினைகள் நேரிடும் பொழுது ஒருவருக்கு மன உளைச்சல் உருவாகின்றது. பிரச்சினைகளை ஆக்கப் பூர்வமாகத் தீர்க்க முடியாத பட்சத்தில் அடுத்தவரின் அன்பை இழந்து விடுவோமோ என்று அச்சம் அவருக்கு ஏற்படுகின்றது. பிரச்சினையைத் தவிர்க்க வேண்டியும், அடுத்தவரின் அன்பைப் பெற வேண்டியும் ஒருவர் தன்னை அறியாமலேயே "நோயாளி போர்வையில்" உள்ள உளைச்சலை உடல் நோய்களாக வெளிப்படுத்துகின்றார்.

பேச்சுக் கோளாறு, வலிப்பு மாதிரியான நோய், கை, கால்கள் விளங்காமை, நடக்கும் பொழுது கால்கள் பின்னிக் கொள்ளுதல், மற்றும் பார்வை, செவி உணர்வு, சுவை, தொடு உணர்வு அறியும் திறன் ஆகியவற்றில் எழும் குறைபாடுகள் முதலியனவே உடலியக்க மாற்றத்தின் அறிகுறிகளாகும்.

## நினைவிழப்பு நிலைகள்

இவ்வகை நோயாளிகள் திடீரென நினைவிழப்பு நிலைகளுக்குச் சென்று விடுவர்.

### 1. சாதாரண நினைவு இழப்பு (Dissociation)

மயக்கமாகப் பல மணித்துளிகள் சுயநினைவு இல்லாமல் நோயாளி இருப்பர். சில சமயங்களில் ஒரு சில பெண்களுக்குச் "சாமி வருவதும்" இதன் அடிப்படையிலேயே. (கலாச்சார ரீதியாக)

### 2. இரட்டை வாழ்க்கை (Multiple Personality)

இவ்வகைநோயில் நோயாளி சில சமயங்களில் வேறொருவராகவே மாறி விடுவார். உடலளவில் எவ்வித மாறுதலும் இல்லாவிடினும், மன இயக்கத்திலும், நடைமுறைச் செயல்களிலும் முற்றிலும் வேறு ஒருவராக அவர் நடந்து கொள்ளுவார்.

உதாரணமாக : கலைச்செல்வி என்பவள் திடீரென மலர்ச்செல்வியாகச் செயல்படுவாள்.

மலர்ச்செல்வியின் நடை, உடை, பாவனை, விருப்பு, வெறுப்பு, கலைச்செல்வியின் தன்மைகளுக்கு மாறாக இருக்கும். சில மணிநேரம் அல்லது சில நாட்கள் கழித்து மலர்ச்செல்வி மீண்டும் கலைச்செல்வியாகச் செயல்படுவாள்.

**3. தன்னை மறந்த நிலை (Fugue)**

இந்நிலையில் பிணியாளர்கள் ஞாபகமின்மை நிலையை அடைந்து தங்கள் பெயர், முகவரி, குடும்பத்தினர், கடந்த கால வாழ்க்கை ஆகிய எல்லாவற்றையும் மறந்துபோகின்றனர்.

## சிகிச்சை முறைகள்

மற்றவர்களின் யோசனைக்குக் கட்டுப்படுவது ஹிஸ்டீரியா நோயாளிகளின் வழக்கமாதலால் இதனையே ஒரு சிகிச்சை கருவியாகப் பயன்படுத்தி மனநல மருத்துவர் நல்ல பல ஆலோசனைகளைப் பிணியாளர்களுக்கு அளிக்கிறார். நோயாளியின் அக மனத்தில் புதைந்து கிடக்கும் எண்ணங்களைக் (சிக்கல் - Conflict) கண்டு பிடித்துச் சிகிச்சை அளிப்பதே சிகிச்சையின் முதற்கட்டமாகும். இம்முறை சிகிச்சையை எளிதாக்குகிறது. மேலும் தங்கள் தேவையை, விருப்பத்தை, வாய்விட்டு மற்றவர்களிடம் கேட்கச் சொல்லிப் பழகப் பிணியாளர்களுக்குப் பயிற்சியையும், ஊக்கத்தையும் மருத்துவர்

அளிக்கிறார். ஹிஸ்டீரியா மனக்கவலையின் வெளிப்பாடாகவும் இருக்கலாம். ஆகவே, மனக்கவலையைப் போக்கத் தகுந்த மருந்துகளையும் மனநல மருத்துவர் நோயாளிகளுக்குத் தருகிறார். இவ்வளவும் அறிந்த பின் இந்நோய்க்கு மனநல மருத்துவம் செய்து கொள்ள இன்னமும் நமக்குத் தயக்கம் வேண்டுமா ?

**பின்குறிப்பு :**

## "ஹிஸ்டீரியா" என்ற வார்த்தையின் மூலக் கருத்து

ஹிஸ்டீரியா என்றால் 'அலைபாயும் கருப்பை' என்று பொருள். கன்னிப் பெண்களிடையே அதிகமாக இந்நோய் காணப்பட்ட காரணத்தினால் ஹிப்போகிரேட்ஸ் காலத்தில் ஏமாற்றமடைந்த (கர்ப்பமுறாததால்) கருப்பை வயிற்றில் அங்கும் இங்கும் அலைபாய்வதாகக் கருதப்பட்டது. அவ்வாறு கருப்பை அமைமோதும் பொழுது பல்வேறு உறுப்புகளோடு உரசுவதால் அவ்வுறுப்புகள் கோளாறுகளுக்கு ஆளாகின்றன என்ற நம்பிக்கையை அன்றைய மக்கள் கொண்டிருந்தனர். இக்கருத்து முற்றிலும் தவறான ஒன்று என்று கட்டுரையைப் படித்ததினால் நாம் அறிவோம். நாளடைவில் ஹிஸ்டீரியா என்ற வார்த்தை பொதுமக்களிடையே மிகவும் பிரபலமாகிவிட்டது. கோபம் கொள்பவனைக் கூட "ஹிஸ்டீரியா நோயாளி" என்று சிலர் அழைக்கத்

தொடங்கினர். மேற்கூறிய காரணங்களால் ஹிஸ்டீரியா என்ற வார்த்தையை உபயோகிக்க மனநல மருத்துவ உலகம் தயக்கம் காட்டுகிறது. இந்நோயை இப்போது Conversion Dissociation (உள்ள உளைச்சலால் உருவாகும் உடல் நோய்) என்று மனநல மருத்துவம் அழைக்கிறது.

பிரச்சினை காலங்களில் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமல் (மனச்சிக்கலை அவிழ்க்க அறியாமல்) பிரச்சினையினால் ஏற்படும் உள்ள உளைச்சலை உடல் நோய்களாகப் பிணியாளர் காட்டுகின்றனர் என்பதனால் பாமர மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் ஹிஸ்டீரியா நோயை மனச்சிக்கல் நோய் என்று கட்டுரை ஆசிரியர் அழைக்கிறார்.

